2017

# முதல் எழுத்து




ம.மா.நு/அக்கரப்பத்தனை ஆரம்ப த.வி
அக்கரப்பத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் எழுத்து

அ - 04    எழுத்து - 04

2017.12.10

மமா/நு/அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயம்.
அக்கரப்பத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | முதல் எழுத்து |
| பதிப்பு | : | டிசம்பர் - 2017 |
| முன் சித்திரம் | : | மாணவர்கள் |
| வெளியீடு | : | நு/ அக்கரப்பத்தனை ஆரம்ப த.வி. அக்கரப்பத்தனை. |
| ஆக்கம் | : | மாணவர்கள் |
| பொறுப்பாசிரியர் | : | ஆசிரியர் சி.சிவக்குமார் |
| கணினி வடிவமைப்பு | : | நியு ஷைன் கம்பியூட்டர்ஸ், மன்றாசி. 0512230158 |
| உற்பத்தி விலை | : | 200/= |
| புத்தக விலை | : | 150/= |

| | | |
|---|---|---|
| Book Name | : | Muthal Eluththu |
| Edition | : | December - 2017 |
| Front Page | : | Students |
| Published By | : | CP/N/Agarapatana Primary T.V, Agarapathana |
| Article | : | Students |
| Editor in Charge | : | Teacher S.Sivakumar |
| Computer Designing | : | New Shine Computers, Glenlyon. 0512230158 |
| Price | : | 150/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து,

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீச
இசைக்கொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

- மகாகவி பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலய கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து செய்தி

மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு பாடசாலை வழங்கும் முயற்சி பாராட்டுக்குரியது. அதன்படி மாணவர்களின் திறமைகள் மற்றும் ஆற்றல்களை வெளிக்கொணர இவ்வருடமும் உங்களது பாடசாலையில் இப்படிப்பட்ட புத்தகம் வெளிவருவது குறித்து வாழ்த்து தெரிவிக்கிறேன். ஆரம்பக்கல்வி பிள்ளைகளின் வாழ்க்கையில் பெறும் முக்கியத்துவமானது மிகவும் இன்றியமையாதது. அதுபோல அவர்களுடைய ஆக்கங்கள், அவர்களின் வெளிப்பாடுகள் என்பன மூலம் பிற்காலத்தில் மிகச்சிறந்த மனித சமுதாயமாக அவர்கள் மிளிர்வார்கள் என நான் நம்புகின்றேன்.

பாடசாலைக் காலத்தில் இவர்கள் பெற்ற பயனுறுதிமிக்க அனுபவங்கள் அந்த பிள்ளைகளின் ஆக்கவெளிபாடு, மறைந்திருக்கும் திறமைகள் என்பவற்றை முடிந்தளவு வெளிக்கொணர உந்து சக்தியாக அமைந்திருக்கிறது. இதற்காக பெறுமதியான நேரத்தை செலவிட்டு உங்களின் ஆசிரிய குழாம் வழங்கும் உற்சாகம், மாணவர்களின் முயற்சி என்பன பற்றி நான் மிகவும் சந்தோசமடைவதோடு உங்கள் முயற்சிகள் மேலும் சிறக்க இனிதே வாழ்த்துகிறேன்.

**திரு M.G.A.பியதாச**

வலய கல்விப்பணிப்பாளர்,

வலயக்கல்வி பணிமனை,

நுவரெலியா.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோட்டக்கல்வி கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து செய்தி

இலக்கும், இலக்கியமும் இல்லா சமூகத்தை இயக்கமில்லாத சமூகமெனலாம். ஒரு மக்கள் கூட்டத்தின் அசைவியக்கம் அவர்களால் புடம் போடப்படுகின்ற இலக்கியங்களிலும் - எழுத்துக்களிலும் எடுத்துக் காட்டப் படுதலினால் இலக்கியங்கள் முதன்மை பெறுகின்றன.

நாளைய சமூக படைப்புக்களை முன்வைத்தலுக்கான அரும்புகள் இன்றுகளில் வழிபடுத்தப்படுவது காலத்தின் கடனாகின்ற இவ்வேளையில் எதிர்கால உருவாக்கங்களை செப்பனிட அவர்களுக்கான வாய்ப்புக்களை உருவாக்கி கொடுத்தல் எமது தார்மீக கடமையென உணர்கின்றேன் இந்த உன்னத பணியை நு/அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள் தமது முதல் எழுத்தினூடாக முதன்மை படுத்துகின்றனர். சுடர்விளக்காயினும் - தூண்டுகோல் தேவை என்பதால் எதிர்கால எழுத்தாளர்கள் முதல் எழுத்தினூடு எழுச்சி பெறுவார்களென திடமாக நம்பிக்கை கொண்டு பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துக்களுடன்

T.வடிவேல்
கோட்டக்கல்வி பணிப்பாளர்
கோட்டம் 03
நுவரெலியா கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

மனிதனுடைய எதிர்காலத்தையும் நல்வாழ்வையும் ஒளிமயமாக்குவதே கல்வியின் பிரதான நோக்கமாகும். மழலைச் செல்வங்களை பாடசாலை எனும் கலையகம் தன்னுள் அன்புடனும், ஆர்வத்துடனும், பாசத்துடனும் அரவணைத்து அவர்களை சிறந்த கல்விமான்களாக, வைத்தியராக, பொறியியலாளர்களாக, ஆசான்களாக, அறிவியல் மேதைகளாக, வழக்கறிஞர்களாக, விஞ்ஞானிகளாக உருவாக்கி நாட்டில் சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த நற்பிரஜைகளாக மிளிரச்செய்வதற்கு கல்விச்செல்வத்தின் ஆரம்ப அடித்தளத்தை மிக உறுதியாகவும் சிறப்பாகவும் உருவாக்கிக் கொடுக்கின்ற பெருமை ஆரம்பக்கல்வி வகுப்பறையில் கற்பிக்கின்ற ஆசிரிய பெருந்தகைகளுக்கு பங்கு உண்டு என்பதை எவராலும் மறுக்க முடியாது.

அந்த வகையில் ம.மா/நு/அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் முயற்சியால் அவர்களின் வழிகாட்டலின்பால் ஆரம்பக்கல்விப் பிரிவு மாணவச் செல்வங்களின் கை வண்ணங்களினால் படைக்கப்பட்டு மலர்கின்ற "முதல் எழுத்து" எனும் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருந்து ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், ஆக்கங்களை படைத்த மாணவர்களையும் பாராட்டுகிறேன்.

**S.செல்வராஜா**
உதவி கல்விப் பணிப்பாளர்
(ஆரம்ப பிரிவு)
வலயக்கல்வி பணிமனை
நுவரெலியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்பு அதிதியின் வாழ்த்துரை

மலையகத்தின் கீர்த்தியில் ஆழமாக தடம் பதிக்கும் நு/அக்கரப்பத்தனை ஆரம்ப பிரிவு பாடசாலை தனது ஆரம்ப பிரிவு மாணவச்செல்வங்களின் ஆக்கங்களை சிறகடிக்கச்செய்து இவ்வருடமும் தனது வருடாந்த நூல் வெளியீடான முதல்எழுத்து வெற்றிகரமாக வெளியீடு செய்து மலையகத்தின் மாண்புமிகு வரலாற்றின் பக்கங்களை தனது தனித்த அடையாளத்தை நானகாவது வருடமும் நிலை நிறுத்தியுள்ளதையிற்று அகம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன்.

வெறுமனே புள்ளிகளுக்கு மாத்திரம் தயாரிக்கப்படும் மாணவர்களுக்கு மத்தியில் அவர்களுள் புதைந்து கிடக்கும் திறமைகளை பறைசாற்றும் களமாக முதல் எழுத்து மிளிர்வது அற்புதமானதாகும்.

மாணவர்களின் தனித்திறமைகளை இனங்கண்டு தோல்தட்டி வழிகாட்டி எதிகாலத்திற்கு பயனுறுதி மிகுந்த பிரஜைகளை உருவாக்கும் அதிபர் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் சிரம் தாழ்த்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

;கூர்மையான ஆயுதங்களால் மாற்றியமைக்க முடியாத உலகை ஒரு பேனையின் மை சொட்டு புதிதாய் அர்த்தமுள்ளதாய் மாற்றிவிடும்;

மனம் நிறைந்த வாழ்த்துகளோடு.
சண்முகம் சிவக்குமார்.
நு/மெராயா த.ம.வி
லிந்துல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி...

ஆரம்பக் கல்வி என்பது கல்வியின் அடித்தளமாகும். அடித்தளத்தில் காலடி எடுத்து வைக்கும் சிறு குழந்தையின் பிஞ்சு மனதில் புதிய விடயங்கள் விதைப்பது மிக சுலபமாகும் எனவே ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வரும் ஒவ்வொரு மாணவனும் மகிழ்ச்சியான சூழலில் சுதந்திரமாக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

மேலும் கற்பித்தல் செயற்பாடானது அவர்களை ஊக்கப்படுத்துவதுடன் ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டவும் கல்வியில் விருப்பமும் கற்றலில் தன்னம்பிக்கை ஏற்படவும் உள்ளார்ந்த ஆற்றல்கள் வெளிப்பட வழி காட்டுவதுடன் அறிவு திறன் மனப்பாங்கை வழங்கி தற்கால உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் நற்பிரஜைகளை உருவாக்குவதே ஆகும்.

அந்த வகையில் முதல் எழுத்து சஞ்சிகையானது மாணவர்களின் எண்ணங்களை சுதந்திரமான முறையில் வெளிக்கொணர அதிபர், ஆசிரியர்கள் எடுத்துள்ள முயற்சி பாராட்டுக்குரியது. மாணவர்களை பல்துறை வளர்ச்சிக்குத் தூண்டும் இச் சஞ்சிகை தொடர்ந்து சிறப்பாக வெளிவர நல்வாழ்த்துக்களை கூறுவதோடு இப்பாடசாலையின் செயற்பாட்டிற்கு ஆசிரிய ஆலோசகர் என்ற வகையில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் இச்சஞ்சிகை வெளிவர காரணமாக இருந்த அனைவருக்கும் எனது பாராட்டினை அகமகிழ்ந்து தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி வாக்கீஸ்வரி ஸ்ரீதேவன்**
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி)
நுவரெலியா வலயம், கோட்டம் III


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி...

பாடசாலை வரலாற்றை தடம்பதிக்கும் வகையில் ஆரம்பகல்வியில் அடித்தளம் இட்டு சின்னஞ் சிறார்களின் கைவண்ணத்தை சஞ்சிகை வடிவில் தருவது எளிதான காரியமன்று.

மாறிவரும் உலகில் கலைத்திட்ட மாற்றத்திற்கு அமைவாக தேர்ச்சிகளின் அடிப்படையில் நடைமுறை படுத்தியுள்ள இச் செயற்திட்டமானது மாணவர்களின் எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு ஒரு வித்தாக அமைகின்றது.

மொழித்திறன் விருத்தியை விருத்தியடைய செய்யும் வகையில் கவனமாக செவிமெடுத்து தெளிவாகப் பேசி கருத்துக்கள் புலப்பட வாசித்து சரியாகவும் செம்மையாகவும் எழுதுவதற்கு முதலேணியாக இச்செயற்பாடு அமைவதோடு சித்திரத்தின் மூலமாக மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த அம்சமாகும்.

மாணவர்களின் ஆக்கத்திறன்களை ஊக்குவித்து வழிகாட்டிய அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்களை பாராட்டுவதோடு நான்காவது முதலெழுத்து சஞ்சிகையை வெளியிட்ட மாணவர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள், ஆசிகள் உரித்தாகட்டும்.

**திருமதி S.சுந்தரம்**
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக்கல்வி)
நுவரெலியா வலயம், கோட்டம் III



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி...

'முதல் எழுத்து' நான்காவது தடவையாகவும் மலர்ந்திருப்பது மனநிறைவைத் தருகின்றது. ஆரம்பக்கல்வியில் ஆழத்தடம் பதிப்பவர்கள் நிச்சயமாக சாதனை மிக்க கல்விமான்களாக எதிர்காலத்தில் தடம் பதிப்பது கண்கூடு. அந்த வகையில் எமது பாடசாலையின் மாணவச் செல்வங்களை எதிர்கால சாதனையாளர்களாக பரிணமிக்கச் செய்வதே எமது ஓரே எதிர்பார்ப்பு அதற்கு அடித்தளமிடும் முயற்சிகளில் ஒன்றுதான் இந்த முதல் எழுத்து.

எமது பாடசாலை வெறுமனே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல எமது சிறார்கள் எவற்றிலெல்லாம் தடம் பதிக்க முனைகிறார்களோ அவற்றிற்கெல்லாம் வழிசமைத்துக்கொடுப்பதற்கான ஒரு களமாகும். எம்மோடு நெருக்கமாக இணைந்திருப்பவர்கள் ஏலவே இதனை நன்கறிவர் அந்த வகையில் மீண்டும் முதல் எழுத்து முழுமைப் பெற்றிருப்பதில் எம்முடன் கைகோர்த்துள்ள அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். எம் இளம் படைப்பாளிகளின் எண்ணங்கள் எழுத்துக்களாக கைவண்ணங்களை கரையேற்றிட காத்திருக்கின்றது 'முதல் எழுத்து' இன்னும் பல சிறப்புக்களுடன் இன்னுமோர் இதழில்.

வாழ்த்துக்களுடன்.

**மு.லோகநாதன்.** அதிபர்
நு/அக்கரப்பத்தனை ஆரம்ப த.வி
அக்கரப்பத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் ஆசி

மாணவச் செல்வங்களின் துள்ளியமான திறமைகளை இனங்கண்டு அதனை வெளிக்கொணர செய்வது எமது கடமையாகும்.

மாணவர்களை கற்றலில் மாத்திரமின்றி வேறுபல திறமைகளிலும் இனங்கண்டு ஊக்குவித்தல் அவசியமாகின்றது. அதனடிப்படையில், காத்திரமான படைப்பாளிகளை எதிர்காலத்தில் உருவாக்கும் நோக்குடன் அவர்களின் ஆக்கத்திறன், மற்றும் வாசிப்புதிறனை மையமாக கொண்டு, மொட்டுக்களின் கைவண்ணங்களை ஒன்றுதிரட்டி முதல் எழுத்து என்ற நாமத்துடன் நான்காவது படைப்பாக உங்கள் முன் கொண்டு வந்திருக்கின்றோம். மாணவர்கள் படைக்கின்ற படைப்புக்களை வெளிக்கொணர செய்வது ஆசிரியர்களாகிய எங்களின் கடமையாகும்.

எங்களின் வாழ்த்துக்களும் ஆசிகளும்.

ஆசிரியர்கள்
ம.மா/நு/அக்கரப்பத்தனை
ஆரம்ப தமிழ் வித்தியாலயம்.

<u>ஆசிரியர்கள்.</u>

திருமதி B.விஜயலதா

திருமதி M.இளங்கேஸ்வரி

திரு T.புண்ணியமூர்த்தி

திரு A.ஆறுமுகம்

திரு S.சிவக்குமார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி

2012

தகவல் சாதனம் வானொலி
தினமும் பல்சுவையறிய வானொலி
பகலிரவாய் ஒலிக்கும் வானொலி
பல்லினமும் விரும்பும் வானொலி
நல்ல செய்திகளுக்கு வனொலி
நாட்டு நடப்பறிய வானொலி
இல்லத்தை குதூகலிக்க வானொலி
இயற்கை நிகழ்வறிய வானொலி
கதைகள் கூறிடும் வானொலி
கிரிகெட் வர்ணணைக்கும் வானொலி
கவிதை சொல்லிடும் வானொலி
பிறந்தநாள் வாழ்த்துக்கு வானொலி
பிரியமான நாடகங்களுக்கு வானொலி
மரண அறிவித்தலறிய வானொலி
மார்கோணியின் சாதனையே வானொலி




S.ருஷ்யந்தினி
தரம் -05

## கவிதை

அக்கரப்பத்தனை நகரில்
அமைந்திருக்கும் ஆரம்ப பிரிவு
பாடசாலையே நாங்கள் தரம் 01 முதல்
தரம் 05 வரை உன் அழகான கட்டிடத்தில் அமர்ந்து
கல்விதனை கற்றோம்.
கலைகளை பல பயின்றோம்
பரிசுகளை பெற்றோம்.
இவ்வாண்டு இறுதியிலே
உன்னை விட்டு பிரிய
மனமில்லை எங்களுக்கோ
உன் நினைவு பல்கலைகழகம்
சென்று பட்டம் பெற்றாலும்
உன் நினைவுகள் எங்கள்
நெஞ்சை விட்டு அகலாது.

S.சகித்தா
தரம் - 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




L.டிலுசன்
தரம் - 03



S.ஜனுஜன்
தரம் - 05





R.துஸ்யந்த்
தரம் - 03



S.ருஸ்யந்தினி
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



K.தக்சான்
தரம் - 03



A.டேனியல்
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

2017

- கடவுள் இருந்தால், அவனை நாம் காணவேண்டும். ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும். அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.

- உலகின் குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளை காண்பாய், ஆனால் நீ உலகுக்கு உதவி செய்ய விரும்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே, குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா, செயல் நன்று சிந்தித்து செயலாற்றுவதே நன்று.

A.ரொஷாந்தினி,
தரம் 04

## எனது இலட்சியம்

எனது இலட்சியம் பொலிஸ் அதிகாரியாகுவது. நான் பொலிஸ் அதிகாரியாகி சமூகத்தில் காணப்படும் குற்றச்செயல்களை குறைக்க பாடுபடுவேன். சட்டத்தை நடைமுறைப்படுத்தி மக்களை காப்பேன். எனது குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக செயற்பட்டு. நாட்டிற்கு ஓர் நல்ல பொலிஸ் அதிகாரியாக சேவையாற்றுவேன்.

R.சுஜீவன்
தரம் - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

## பேனை

நான் தான் பேனை
என்னை தெரியாதவர்கள் யாரும் இல்லை
நான் நலமாக இருக்கின்றேன்
நீங்கள் நலமாக இருக்கின்றீர்களா?
நான் பல நிறங்களிலும் இருப்பேன்
என்னை பெரியவர், சிறுவர்கள் அனைவரும்
பயன்படுத்துவார்கள்.
நான் செய்யும் சில வேலைகளை கூறுகின்றேன்,
கடிதம் எழுதுவதற்கு, பரீட்சை எழுதுவதற்கு,
வரைவதற்கு, பாடம் செய்வதற்கு போன்ற
வேலைகளுக்கு என்னை பயன்படுத்துவார்கள் ஆனால்
என்னை சிறுவர்கள் வீசுகின்றார்கள் பெரியவர்களே
சிறுவர்களிடம் என்னை வீச வேண்டாம், கால்களால்
மிதிக்க வேண்டாம் என்று கூறுங்கள். என்னை தீய
வேலைகளுக்கு பயன்படுத்தாதீர்கள்.

S.விஸ்மிதா
தரம் 04

## அப்பா

என்னை பத்து மாதங்கள் கருவறையில் சுமந்தவள்
என் தாய் என்னையும் என் தாயையும்
சேர்த்து தன் நெஞ்சில் சுமப்பவர்
என் அப்பா

K.டிலக்சிக்கா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



T.பவிஸ்காந்தன்
தரம் 02



J.திருசாலினி
தரம் 02




J.அம்சிகா
தரம் 02



R.சிந்துஜா
தரம் 02



கபிலாசினி
தரம் 02




R.ராகவர்சினி
தரம் 02



P.சாருகேசி
தரம் 02



M.மதுசனா
தரம் 02



N.கபிசான்
தரம் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

## பழமொழிகள்

- அடாது செய்பவர் படாது படுவார்
- ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
- ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்
- கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
- குப்பையில் போட்டாலும் குன்று மணி மங்காது
- சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.

C.வைஸ்னவி
தரம் 03

## ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர் 1822 ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் கந்தப்பிள்ளை இவரது தாயர் பெயர் சிவகாமி. இவரது இயற்பெயர் ஆறுமுகம். இவர் இவரது பெற்றோருக்கு கடைசி பிள்ளையாவார். இவர் கார்த்திகை மாதம் 21ம் திகதி இறையடி சேர்ந்தார்.

S.லக்ஸ்மித்தா
தரம் 03

## எனது செல்ல பிராணி



வள் வள் என்று குரைக்கும்
நாய் நன்றியுள்ள மிருகம்
எனது நாய் வெள்ளை கறுப்பு கலந்த நிறம்
எனது நாய் என்னோடு விளையாடும்
எனக்கு அதை மிகவும் பிடிக்கும்.

K.தனுஷன்
தரம் 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

தமிழில் உள்ள உயிர் எழுத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ |
| உ | ஊ | எ | ஏ |
| ஐ | ஒ | ஓ | ஔ |

உயிர் எழுத்துக்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும்.

J.ஜெனிபர்
தரம் 03

எனக்கு பிடித்த பாடல்...

**புறா**

புறா புறா வெள்ளைப் புறா!
பறந்து போகுது வெள்ளைப் புறா!
படபடக்குது வெள்ளைப் புறா!
பாடித் திரியுது வெள்ளைப் புறா!
களத்து மேட்டிலே வெள்ளைப் புறா!
கொத்தித் தின்னுது வெள்ளைப் புறா!
மாடி வீட்டில் வெள்ளைப் புறா!
மறைந்து தின்னுது வெள்ளைப் புறா!
வேடன் வந்ததும் வெள்ளைப் புறா!
விரைந்து பறக்குது வெள்ளைப் புறா!



S.ஹபிஷாலினி
தரம் 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




M.பிரனீசன்
தரம் 01



V.ஏனுசா
தரம் 01



S.வனிக்கா
தரம் 01




ரக்சன்
தரம் 01



N.பாருக்சன்
தரம் 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லிதுசன்
தரம் 01




R.யதுர்சிக்கா
தரம் 01



சுபித்தா
தரம் 01



M.சுபித்தா
தரம் 01



T.கவினாஸ்
தரம் 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

அம்மா

எனது அம்மாவின் பெயர் ரஞ்சனி
எனது அம்மா நல்லவர்
எனக்கு உணவு செய்து கொடுப்பார்
என்னை பாடசாலைக்கு அனுப்புவார்
எனக்கு விருப்பமானதை வாங்கி தருவார்.
எனது அம்மா மிகவும் அழகானவர்.
எனது அம்மாவை எனக்கு மிகவும் பிடிக்கும்.

P.ரக்ஷிக்கா
தரம் 03

பொது அறிவு

மிக வேகமாக பறக்கும் பறவை - புறா
பறக்க தெரியாத பறவை - பென்குயின்
கூர்மையான பார்வையுடைய பறவை - கழுகு
மிக வேகமாக ஓடம் மிருகம் - சிறுத்தை
உலக சிறுவர் தினம் - ஒக்டோபர் 01
உலக வீரர் தினம் - மே 22
கண்களை அசைக்காத படி இருப்பது - ஆந்தை

S.சிந்துஜா
தரம் 03

கோழி



நான் தான் கோழி
நான் முட்டை இடுவேன்
அடை காப்பேன்
குஞ்சு பொரிப்பேன்
குஞ்சுகளை கவனமாக வளர்பேன்

P.தில்ருக்ஷான்
தரம் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொக்கு**

கொக்கு வெள்ளை நிறம்
கொக்கு மீன் பிடிக்கும்
கொக்கு அழகான பறவையாகும்.
கொக்கின் சொண்டு நீளமானது

T.லக்சிக்கா
தரம் 02


## விடுகதைகளும் விடைகளும்

1. ஆண்டு தோறும் வரும் வரி அடுத்தடுத்து வரும் வரி அது என்ன?
   ஜனவரி பெப்ரவரி
2. ஆயிரம் நூல் பின்னலை அள்ளி அள்ளி திக்கலாம் அது என்ன?
   இடியப்பம்
3. கண்டு பூ பூக்கும் காணாமல் காய் காய்கும் அது என்ன?
   வேர்கடலை
4. கண்டது இருவர் எடுத்தது பத்து பேர் உண்டது ஒருவர் யார் அவர்கள்?
   கண், விரல்கள், வாய்
5. அண்ணன் இனிப்பு தம்பி புளிப்பு தங்கை மணப்பாள் யார்?
   பால், மோர், நெய்

G.கார்த்திகாயனி
தரம் 02

**பூக்கள்**

சின்ன சின்ன பூக்கள்
சிறிய நல்ல பூக்கள்
வெள்ளை நிறப் பூக்கள்
வெற்றி தரும் பூக்கள்
மஞ்சள் நிறப் பூக்கள்
மனதை கவரும் பூக்கள்



P.சாருகேஷி
தரம் 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017

## காலைக் காட்சி

காலையில் சூரியன் கிழக்கு வானில் உதிக்கும்
மக்கள் கண் விழித்து எழும்புவார்கள்
கடமைகளைக் கவனிக்க தொடங்குவார்கள்
மொட்டுக்கள் விரிந்து பூக்களாக காட்சி தரும்
காலைக்காட்சி மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

T.பவிஸ்காந்தன்
தரம் 02

## எனது பெயர் சேவல்



நான் காலையில் கூவுவேன்
குப்பைகளையும் கிளருவேன்
பூச்சி புழுக்களை உண்பேன்.


J.திருஷால்னி
தரம் 02

## பால்

பால் சுவையானது
பாலை எல்லோரும் விரும்பி குடிப்பார்கள்
சிறியோர் முதல் பெரியோர் வரை குடிப்பார்கள்

V.பிரவீன்
தரம் 02

## குரங்கு



நான் தான் குரங்கு
நான் மரங்களில் வசிப்பேன்
நான் மரத்திற்கு மரம் தாவுவேன்
நான் பழங்களை விரும்பி உண்பேன்

K.அம்சாயினி
தரம் 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

இலங்கையின் தேசிய மரம் - நாக மரம்
இலங்கையின் தேசிய பறவை - காட்டு கோழி
இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்
இலங்கையின் தேசிய மிருகம் - மர அணில்
இலங்கையின் மிகப் பெரிய மலை - பேதுருதாலகால மலை

2012

N.பிருந்தா
தரம் 03

## எமது பாடசாலை

எனது பாடசாலை நு/அக்கரப்பத்தனை ஆரம்ப தமிழ் வித்தியாலயம் ஆகும். எனது பாடசாலை நுவரெலியா வலயத்தில் கோட்டம் மூன்றில் அமைந்துள்ளது. எனது பாடசாலையில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புக்கள் உள்ளன. எனது பாடசாலையில் ஆறு ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். எனது அதிபரின் பெயர் திரு M.லோகநாதன் எனது வகுப்பாசிரியரின் பெயர் திருமதி ம.இலங்கேஸ்வரி எனது வகுப்பில் 30 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். எனது பாடசாலையை நான் மிகவும் நேசிக்கின்றேன்.

R.யதுர்ஷியா
தரம் 03

## ஒன்றையொன்று மிகவும் ஒத்திருக்கும் இலைச்சோடிகள்.

மிளகு - வெற்றிலை
அகத்தி - புளி
பயறு - உழுந்து
கற்றாளை - அன்னாசி
எலுமிச்சை - தோடை
பப்பாசி - மரவள்ளி
குன்றிமணி - தொட்டாச்சுருங்கி
பலா - கிண்ணை
கறிவேப்பிலை - வேம்பு

R.லிக்ஷிகா
தரம் 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



S.கவிதாரணி
தரம் 01




S.ஜதுர்சினி
தரம் 01



S.லக்சியா
தரம் 01

K.சருபனா
தரம் 01





லக்சிகா
தரம் 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



B.கெனிசியஸ்
தரம் 01



சசனி
தரம் 01



H.நவீஸ்
தரம் 01



V.சபானுஜா
தரம் 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

**விடுகதை**

1. நன்றாக சுமை தாங்கும் நன்றாக உதை உதைக்கும் அது என்ன?
2. காற்றைக் குடித்து கைகளிலே தவழும் அது என்ன?
3. சுடுபட்டுச் சிவந்தவன் வீடு கட்ட உதவுபவன் அவன் யார்?
4. வட்ட முகமுண்டு வாய் திறந்து பேசாது காட்டக் கையுண்டு காலூன்றி நடக்காது அது என்ன?
5. இரவு முழுவதும் வெளிச்சம் விடிந்த பின் பார்த்தால் அவனைக் காணவில்லை அவன் யார்?

விடைகள்

1. கழுதை 2. பலூன் 3. செங்கல் 4. கடிகாரம் 5. நிலவு

R.டினுஷியா

## முதியோர்

முதியோர்கள் எமக்கு நல்ல பழக்கங்களை கற்று தருவார்கள். அவர்களை நாம் ஒருநாளும் துன்பப்படுத்துதல் கூடாது. எமது நல்வாழ்வுக்கும் உதவுவார்கள். பல நல்ல அறிவுரை கூறும் கதைகளையும் சொல்லி கொடுப்பார்கள். நாம் எப்போதும் முதியோர்களுக்கு உதவி செயவோம்.

R.அரூபன்
தரம் 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா சொன்னதில் எனக்கு பிடித்த கதை..

2012

**மானும் செடியும்**

ஒரு காட்டில் வேடர்கள் ஒரு மானை விரட்டி வந்தார்கள் அப்போது அம்மான் ஒரு செடியின் பக்கமாக ஓடி ஒழிந்துக்கொண்டது. வேடர்கள் மானை காணவில்லை என எண்ணி அந்த இடத்தை விட்டு செய்றார்கள் அப்போது அந்த மான் அச்செடியை தின்ன ஆரம்பித்தது. செடி அசைகின்ற சத்தம் கேட்டதும் வேடர்கள் அந்த செடி பக்கமாக ஒரு அம்பை விட்டார்கள். அது மானை கொன்றது. மான் சாகும் போது இந்த தண்டணை எனக்கு தேவைதான் என்னை மறைத்து காப்பாற்றிய செடிக்கே துரோகம் செய்து விட்டேன் என்று சொல்லியவாறே இறந்தது.

நன்றி மறக்காதே..

A.ஜதுர்ஷன்
தரம் 04


## ஆண்டு நிறைவு விழாக்கள்

1ம் வருடம் - காகித விழா
2ம் வருடம் - பருத்தி விழா
3ம் வருடம் - தோல் விழா
4ம் வருடம் - படிவிழா
5ம் வருடம் - மா விழா
6ம் வருடம் - இரும்பு விழா
7ம் வருடம் - செம்பு விழா
8ம் வருடம் - வெண்கல விழா
9ம் வருடம் - மண் கலச விழா
10ம் வருடம் - தகர விழா
11ம் வருடம் - எ.்.கு விழா
12ம் வருடம் - லினன் விழா
13ம் வருடம் - பின்னல் விழா
14ம் வருடம் - தந்த விழா
15ம் வருடம் - படிகவிழா
20ம் வருடம் - பீங்கான் விழா

ச.மிலுக்ஷன்
தரம் 04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




T.லக்சிகா
தரம் 02



V.பிரவீன்
தரம் 02




P.சிரிதரன்
தரம் 02



V.பிரசாந்தன்
தரம் 02




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்சாயினி
தரம் 02

D.வருசன்
தரம் 02



R.துசாந்தினி
தரம் 02



D.திவானி
தரம் 02





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

## சிறுவர்கள்

சிறுவர்கள் நாட்டின் அருஞ் செல்வங்கள்.
இன்றைய சிறுவர்கள் நாட்டின் வருங்காலப் பிரஜைகள்.
சிறுவர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக வளர வேண்டும்.
சிறுவர்களுக்கு பல உரிமைகள் உள்ளன.
கல்வி கற்பது சிறுவர்களின் உரிமையாகும்.
சிறுவர்களை யாரும் தண்டித்தல் ஆகாது.
சிறுவர்களைக் கல்வி கற்க விடாது வேலைக்கு அமர்த்துவது குற்றமாகும்.
ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி உலக சிறுவர் தினம் கொண்டாடப்படும்.
சிறுவர் உரிமைகள் தொடர்பான பிரகடனம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது.
அதில் சிறுவர்களுக்குரிய உரிமைகள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

G.சருவன்
தரம் 04

## எனது பெற்றோர்

என்னையும் எனது அண்ணாவையும் சுமந்த தாய்க்கு நன்றி.
என்னையும் எனது அண்ணாவையும் நலமாக வைத்திருக்கின்றீர்கள் அது போலவே எமது குடும்பத்தையும் கவனமாக பார்த்து கொள்கின்றீர்கள். அம்மா, அப்பா உங்களைப் போல நல்லவர்கள் யாரும் இருக்க முடியாது. உங்கள் இருவரையும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

M.வினோதினி
தரம் 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

## திருக்குறள்

- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். அவர் பலநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அவர் இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர். அவருக்கு தெய்வப்புலவர், பொய்யாமொழிப் புலவர் எனப் பல பெயர்கள் உண்டு. திருக்குறளில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன. இவர் உண்மை பேச வேண்டும், தர்மம் செய்ய வேண்டும், இளமையில் கல்வி கற்க வேண்டும் எனக்கூறியுள்ளார். அவர் கூறியுள்ள விடயங்களை நாமும் கடைபிடிப்போம்.

K.தர்சன்
தரம் - 03

## இலங்கை தொடர்பான பொது அறிவு துளிகள்


01. இலங்கை சுதந்திரமடைந்தது 1948.02.04.
02. இலங்கையின் மொத்த பரப்பளவு 65610 சதுர கிலோமீற்றர்.
03. தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரக்கோன்.
04. தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் C.W.W.கன்னங்கரா
05. தேசியக்கொடியை நிர்மாணித்தவர் S.P.சாள்ஸ் 1945
06. இலங்கையின் அதிரகாரபூர்வ மொழிகள் சிங்களம், தமிழ்.
07. தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் நல்லதம்பி புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



T.கீர்த்திஹாசன்
தரம் - 03



B.கபிசாந்
தரம் - 03



J.லியோன்
தரம் - 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



J.ரவிநாத்
தரம் - 05



R.லோகபிரதாப்
தரம் - 03



A.சுபாஸ் மிலுக்சன்
தரம் - 03



R.துஸ்மித்தா
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பிரதான நீர்வீழ்ச்சிகள்

2012

01. லக்சபான நீர்வீழ்ச்சி

இது சிவனடி பாத மலையில் உற்பத்தியாகின்றது.
மின் உற்பத்திக்கான நீர் வீழ்ச்சியாக விளங்குகின்றது.

02. தியலும நீர்வீழ்ச்சி

இது பூனாகல ஓயாவில் உற்பத்தியாகின்றது.
இலங்கையில் இரண்டாவது உயரம் கூடிய நீர்வீழ்ச்சி ஆகும்.

03. பம்பரகந்த நீர்வீழ்ச்சி

இலங்கையில் மிகவும் உயரம் கூடிய நீர்வீழ்ச்சி இதுவாகும்
ஏறத்தாழ 263 மீற்றர் உயரமுடையது

04. துங்ஹிந்த நீர்வீழ்ச்சி

மிகவும் அழகிய நீர்வீழ்ச்சியாகும்.
இது பதுளை ஓயாவில் ஊற்றெடுக்கின்றது.

05. அபடீன் நீர்வீழ்ச்சி

இது சுமார் 98 அடி உயரமுடையது அபடீன் தோட்டப் பிரதேசத்தை ஊடுருவிச் செலவதால் இது அபடீன் நீர் வீழ்ச்சி என அழைக்கப்படுகின்றது.

S.விக்ரம்
தரம் - 05

## இலங்கையில் உள்ள பிரதான ஆறுகள்

| | |
|---|---|
| களனி கங்கை | மாதரு ஓயா |
| மகாவலி கங்கை | களுகங்கை |
| யான் ஓயா | ஜின் கங்கை |
| மா ஓயா | நில் வள கங்கை |
| கனகராய ஆறு | வளவ கங்கை |
| கிரிந்தி ஓயா | மாணிக்க கங்கை |
| கும்பக்கன் ஓயா | கலா ஓயா |
| கிரிந்த ஓயா | கல் ஓயா |
| தெதுரு ஓயா | மகா ஓயா |
| மல்வத்து ஓயா | |

S.விக்ரம்
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

## அம்மா

எனது அம்மா மிகவும் அழகானவர்.
எனது அம்மா என்னை நன்றாக கவனித்துக் கொள்ளுவார்.
எனது அம்மா நன்றாக சமைப்பார்.
எனது அம்மா என்னை பாசமாக அழைப்பார்.
எனது அம்மாவின் பெயர் எஸ்.அழகுராணி
மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை
அழகான தமிழில் எனக்கு தெரிந்த கவிதை அம்மா.
உண்மையின் முகவரி, அன்பின் அடையாளம் தாய்.
ஈரேழு ஜென்மம் எடுத்தாலும் எனக்கு பிடித்த முதல் கடவுள் தாய்.



S.ஹரிசாந்தினி
தரம் - 04

## நல்ல பண்பு

அது ஓர் அடர்ந்த காடு, அங்கு சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தச் சிங்கத்திற்கு நோய் ஏற்பட்டது. வைத்தியரிடம் செல்ல முடியவில்லை. உதவிக்கு யாரும் இல்லை. நரி ஒன்று வந்தது. சிங்கம் நரியிடம் உதவி கேட்டது. சிங்கமே நீயோ கொடிய மிருகம் உனக்கு உதவி செய்ய என்னால் முடியாது என நரி சொன்னது. அப்போது முயல் ஒன்று வந்தது. சிங்கம் முயலிடம் உதவி கேட்டது. நீயோ கொடிய மிருகம் என்னைச் சாப்பிட்டு விடுவாய். ஆனாலும் நான் உதவி செய்கிறேன். தீயோரானாலும் உதவுவது நல்ல பண்பு எனக் கூறிச் சிங்கத்தை வைத்தியரிடம் அழைத்துச் சென்றது.

V.மதுசன்
தரம் 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

## பாடசாலை - SCHOOL

| | | |
|---|---|---|
| S - Sincerity | - | உண்மை |
| C - Character | - | நடத்தை |
| H - Health | - | ஆரோக்கியம் |
| O - Order | - | ஒழுங்கு |
| O - Obedience | - | கீழ்ப்படிவு |
| L - Learning | - | கற்றல் |

இவை அனைத்தும் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ, மாணவியரிடத்தில் இருத்தல் வேண்டும்.

M.அபிநயா
தரம் - 05

## நூல்களும் அதன் ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | - | இளங்கோ அடிகள் |
| இராமாயணம் | - | கம்பர் |
| பெரியபுராணம் | - | சேக்கிழார் |
| சீறாப்புராணம் | - | உமறுப்புலவர் |
| மகா பாரதம் | - | வில்லி புத்தூரர் |
| திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |
| சத்தியசோதனை | - | காந்தி |
| நற்சிந்தனை | - | யோகர்சுவாமிகள் |
| பாஞ்சாலி சபதம் | - | சு.பாரதியார் |
| நண்ணூல் | - | பவநந்தி முனிவர் |

M.அபிநயா
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

## எனது ஆசான்

நல்லறிவை எனக்கு தந்து
இப்பாரினிலே என்னை ஒரு
திறமையான பிள்ளையாக்கி,
நல் வழிகாட்டி,
நூல்களையும் தேடி எனக்கு
தந்து, இத் தரணியிலே
என்னை
புகழுடனே பேச
வைத்த ஆசானை
தெய்வம் போல போற்றுவேன்
என் உயிர் உள்ள வரைக்கும்.

S.ருஷ்யந்தினி
தரம் - 05



## எனது பொழுது போக்கு


எனது பொழுது போக்கு வரைதல்.
நான் வரைவதை மிகவும் விரும்புவேன்.
எனது ஓய்வு நேரத்தை வரைவதில்
களிப்பேன்.
பொழுது போக்கில் வீணாக இருக்க
மாட்டேன் வரைந்து களிப்பேன்.

S.ஜனுஷன்
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயல்



துள்ளி ஓடும் வெள்ளை முயலை
அல்லி அணைக்க ஆசை
பஞ்சு போன்ற சின்ன முயலை
கொஞ்சித் தடவ ஆசை
ஆட்டும் காதை அப்படியே
தொட்டு தடவ ஆசை
பாட்டுப்பாடி பாட்டுப்பாடி
பார்த்திடவே ஆசை

S.ஹர்ஷனா
தரம் -05

## பொன்மொழிகள்

தைரியமே நம்முடைய மிக நெருங்கிய நண்பன்.
காற்றும் அலையும் திறமையுள்ள மாலுமிக்கு சாதகமாக இருக்கும்.
தன்னம்பிக்கை தான் வெற்றிப்பாதையின் முதல்படிக்கட்டு.
அன்போடு நடந்து கொள்ளும் சமயங்களில் நீங்கள் சொர்க்கத்தை நேரில் காண்பீர்கள்.
முட்டாளின் இதயம் அவன் வாயிலுள்ளது. அறிவாளியின் வாய் அவன் இதயத்திலுள்ளது.
இன்னும் நாம் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் செய்ய ஆற்றல் பெற வேண்டுமா? முதலில் பொறாமையை ஒழியுங்கள்.

M.அபிநயா
தரம் 05

## தெரிந்து கொள்வோம்

- சிலந்தியில் 40 ஆயிரம் வகைகள் உள்ளன.
- கழுகு 40 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.
- அனகொண்டா பாம்பு 13 மீற்றர் நீளமுடையது.
- தேனீக்களுக்கு காது கிடையாது.
- முள்ளம் பன்றியின் முதுகில் சுமார் 30 ஆயிரம் முட்கள் இருக்கும்.
- கழுதை ஒரு நாளில் 1 மணி நேரம் மட்டுமே உறங்கும்.
- புல்லாங்குழலில் எட்டுத் துளைகள் இருக்கும்.

M.அபிநயா
தரம் 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012

## அன்பின் அம்மா



அன்பின் சின்னமே அழகின் தீபமே
உயிரின் நொடிய அன்பின் வெள்ளமே
பூக்களின் தேனே தீபத்தின் திருவிளக்கே
உயிரின் சுவாசமே உலகின் ஒலியே
கலையின் திறமையே கொடுக்கும்
வள்ளலே பூக்களின் தோற்றமே
உலகின் ஆசையே இதயத் துடிப்பே
உண்மையின் அடையாளமே புண்ணியத்தின்
தெய்வமே காற்றின் சூறாவளியே
நீரின சுனாமியே உயர்வின் வியர்வையே
மரத்தின் நிழலே வாழ்வின் சின்னமே.

M.சரண்யா
தரம் - 05

## ஒரு பொருள் பன்மொழி

01. மதி - புத்தி, சந்திரன். மதித்தல்
02. நகை - சிரிப்பு, ஆபரணம்
03. அரி - சிங்கம், வண்டு, அரிதல்
04. மெய் - உண்மை, உடல்
05. சக்கரம் - சில்லு, வட்டம்
06. வளை - புற்று, வளையல், சங்கு
07. கலை - ஆண்மான், கலைத்தல், வித்தை
08. இழை - ஆபரணம், நூல். பின்னுதல்
09. அரை - பாதி, இடுப்பு, அரைத்தல்
10. பணி - தொண்டு, பாம்பு, கட்டளை
11. நித்திரை - துயில், உறக்கம், சயனம்
12. நட்சத்திரம் - விண்மீன், தாரகை, வெள்ளி, உடு
13. அன்பு - பாசம், நேசம், கருணை, இரக்கம்
14. புத்தகம் - ஏடு, பனுவல், நூல், இழை
15. பூந்தோட்டம் - கா, பூங்கா, பூஞ்சோலை
16. விருப்பம் - ஆசை, அவா, வேட்கை, பற்று
17. குழந்தை - குழவி, மழலை, சிசு, சேய், மகவு
18. உலகம் - தரணி, காசினி, அவனி, பூமி
19. காடு - வனம், கானகம், அடவி, ஆரணியம்
20. பாம்பு - சர்ப்பம், அரவம், பணி, கட்செவி

S.அஷானி பெர்சியா
தரம் - 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

2012

| | |
|---|---|
| மிகப்பெரிய கோள் | - வியாழன் |
| பாலூட்டும் பறவை | - வெளவால் |
| வேடுவர்களின் புனித நூல் | - யாக்பெல் |
| அதிக நீர் அருந்தும் பறவை | - புறா |
| வாத்து முட்டையிடும் நேரம் | - அதிகாலை |
| முக்கனிகள் | - மா, பாலா, வாழை |
| இறக்கை இல்லாத பறவை | - கிவி |
| சர்வதேச சிறுவர் தினம் | - ஒக்டோபர் 01 |

J.அஸ்திக்கா
தரம் - 05

## பாரதியார் கவிதை

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
துச்சமாக எண்ணி நம்மைச்
தூறு செய்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்ச மென்ப தில்லையே
பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை
பெற்று விட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
இச்சைகொண்டே பொருளெலாம்
இழந்துவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே



தொகுப்பு :-
K.பிறைமி
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு துளிகள்

2012

1. தேசப்படத்தில் நதிகளை குறித்துக் காட்டபயன்படும் நிறம்
நீலம்
2. துன்கிந்த, தியலும ஆகிய நீர் வீழ்ச்சிகள் காணப்படும் இடம் - பதுளை
3. இலங்கை முழுவதையும் ஆங்கிலேயர் கைப்பற்றிய ஆண்டு - 1815
4. இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்கியவர் - ஹேனல் ஒல்கொட்.
5. வெற்றுக்கண்களால் பார்க்கமுடியாத உயிரினம் - நுன்னங்கிகள்
6. இயற்கையான ஒளியைக்கொண்ட பிராணி - மின்மினிப்பூச்சி
7. கடற் பசு என அழைக்கப்படும் பிராணி - சீல் மீன்
8. மனிதன் உடலில் இரத்தத்தை உறிஞ்சும் நுளம்பு - பெண் நுளம்பு
9. தாவரங்களின் சாற்றை உறிஞ்சும் நுளம்பு - ஆண் நுளம்பு
10. பேராதனை தாவரவியற் பூங்காவின் பரப்பு - 147 ஏக்கர்
11. பேராதனை தாவரவியற் பூங்கா உருவான ஆண்டு - 1840ம் ஆண்டு.
12. திரவநிலையில் உள்ள உலோகம் - இரசம்
13. உலகின் எட்டாவது அதிசயம் - சிகிரியா ஓவியம்
14. கண் நோய் ஏற்பட்டுள்ள ஒருவரின் கண்களைக் கழுவ பொருத்தமான இலை - மாதுளை.
15. துருப்பிடித்த ஆணி குற்றிய ஒருவருக்கு அவித்து கொடுக்கக்கூடியது - மரமஞ்சள்
16. அம்மை நோய் உள்ள ஒருவரின் உடலில் அரைத்து பூசும் இலை - வேம்பு.
17. உலகில் மிகப் பெரிய நதி - மிசிசிபி
18. உலகில் அதிக மக்களால் பேசப்படும் முதலாவது மொழி - சீனமொழி
19. உலகில் அதிக மக்களால் பேசப்படும் இரண்டாவது மொழி - ஆங்கிலம்
20. சந்திரனின் முதல் முதலில் காலடி வைத்தவர் - நீல் ஆம்ஸ்ரோங்
21. மனித மூளை தனது ஆயுட் காலத்தில் சேமித்து வைக்கக்கூடிய செய்திகளின் அளவு - 10 கோடி
22. வாயில் சுவை நரம்புகள் இல்லாத பிராணி - திமிங்கிலம்

ஆ.சரணியா
தரம் - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அறிமுகம்

எண்பதுகளில் காலையில் சிங்கள மாணவர்களுக்கும், மதியவேலைக்கு பிறகு தமிழ் மாணவர்களுக்குமாக தற்போதைய நு/அக்கரப்பத்தனை சிங்கள ம.வி கட்டிடத்தில் செயற்பட்டு வந்த கற்றல் நடவடிக்கைகள் அமரர் கௌரவ சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா அவர்களின் செயலாக்கத்தால் 1984.11.24 அன்று தொடக்கம் அக்கரப்பத்தனை தமிழ் வித்தியாலயமாகவும் பின் தமிழ் மகா வித்தியாலயமாகவும் தனித்து இயங்கத் தொடங்கியது.

அதன் பின் கடந்த வருடங்களில் தரம் 1 தொடக்கம் 13 வரை இயங்கி வந்த இப்பாடசாலை கடந்த 2013.02.13 அன்று முதல், தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட தனிப் பாடசாலையாக தனித்து இயங்கி வருகின்றது. அந்த வகையில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஆரம்பப்பிரிவின் வளர்ச்சி கட்டத்தை நோக்குமிடத்து.

- 2007 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **6 பேர், வகுப்பாசிரியர் - செல்வி சு.சாந்தி.**
- 2008 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **2 பேர், வகுப்பாசிரியர் - திரு ஜெ.பபியான்**
- 2009 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **6 பேர், வகுப்பாசிரியர் - திருமதி M.மதிவதனி.**
- 2010 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **6 பேர். இதில் மாணவர் ரோ.ரோஷான் 176 புள்ளி பெற்று மாவட்டத்தில் 4ம் இடம், நுவரெலியா வலயத்தில் முதலாம் இடம். C.ப்ரீந்சா - 150, N.பவநிஷா - 148, R.மதுஷா - 148, N.கௌசல்யா - 147, S.இந்துஜா - 143. வகுப்பாசிரியர் - ஜெ.பபியான்**
- 2011 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர் ஒருவர், **வகுப்பாசிரியர் - திருமதி மெடோனாதேவி**
- 2012 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **5 பேர், வகுப்பாசிரியர் - திருமதி டி.சசிரேகா.**
- 2013.02.13 **ஆரம்பப்பிரிவு தனிப் பாடசாலையாக்கப்பட்டு திருமதி டீ.ராஜகுமாரி அவர்கள் பதில் அதிபராக நியமனம்.**
- 2013 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் **5 பேர், வகுப்பாசிரியர்கள் - திரு ஏ.ஆறுமுகம், திருமதி டீ.சசிரேகா.**
- 2014.02.05 **அதிபராக திரு எம்.லோகநாதன்** அவர்கள் பொறுப்பேற்றார்.
- 2014 **மின்சார இணைப்பு வழங்கப்பட்டது.**
- 2014.06.15 **சிரமதானம்** மேற்கொள்ளப்பட்டு பெற்றோரின் பேராதரவுடன் **நீர் குழாய்கள்** தனியாக பொருத்தப்பட்டு நீர்வசதி பெறப்பட்டது.
- 2014.07.01 மாணவத் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு சின்னங்கள் அணிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2014 ஜீலை தமிழ்த்தினப்போட்டி அக்கரப்பத்தனை பிரிவில் பேச்சு இரண்டாமிடம் செல்வி எஸ்.பேபிஷாமினி.
- 2014.09.01 அக்கரப்பத்தனை ஜெயசந்திரன்ஸ் டெக்ஸ்டைல்ஸ் அனுசரனையில் ஒருவருடத்திற்கு வீரகேசரி பத்திரிகை கிடைக்கப்பெற்றது.
- 2014.09.04 கல்விசேவைகள் அமைச்சால் மாணவர் போஷாக்கு மட்டத்தை உயர்த்த பால்பக்கட் வழங்கப்படுகின்றன.
- 2014 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர்கள் 6 பேர். ஏ.சிந்துஜன் - 169, கே.சுவேத்தா, எஸ்.ரொனால்ஸ் - 167, ஆர்.கனிஸ்கா - 160, ஆர்அபிநாத் - 158, சு.கபிஷன் - 158, 70இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் 28 பேர், வகுப்பாசிரியர் - திரு டீ.புண்ணியமூர்த்தி.
- 2014 முதலாவது நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.
- 2014 நவராத்திரி விழா கோட்டமட்டப் பேச்சு போட்டியில் முதலாமிடம், வலயமட்ட போட்டியில் இரண்டாமிடம் செல்வி எஸ்.பேபிஷாமினி.
- 2014 நவம்பர் 15 பாடசாலை வரலாற்றில் முதலாவது சிறுவர் சஞ்சிகை "முதல் எழுத்து" வெளியீடு.
- 2015 முதல் தடவையாக செயற்பட்டு மகிழ்வோம் "சிறுவர் விளையாட்டுப் போட்டி" நடாத்தப்பட்டது.
- 2015 தமிழ்மொழித்தினப் போட்டியில் பிரதேச மட்டத்தில் கதை கூறல் போட்டியில் முதலாம் இடம், வலய மட்டத்தில் முதலாம் இடம், மாகாண மட்டத்தில் 4ம் இடம். செல்வன் H.அஜய் தரம் - 4 பிரதேச மட்டத்தில் M.டினுஷிகா, தரம் 5 பேச்சுப் போட்டி 2ம் இடம், R.யோகன்யா, தரம் 4 பாவோதல் 3ம் இடம், S.கபிலாஷினி, தரம் 5 எழுத்தாக்கம் 3ம் இடம்.
- 2015 செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டுப் போட்டியில் தரம் - 4 இற்கான போட்டியில் வலய மட்டத்தில் இரண்டாம் இடம்.
- 2015 தரம் 5 புலமைபரிசில் பரீட்சையில் புலமைபரிசில் பெற தகுதி பெற்றவர் M.டினுஷிகா - 165, 70இற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்கள் 28 பேர், வகுப்பாசிரியர் - திரு ஜெ.பபியான்.
- 2015.11.29 இரண்டாவது "முதல் எழுத்து" சிறுவர் சஞ்சிகை வெளியீடு.
- 2016 ஆம் செயற்பட்டு மகிழ்வோம் சிறுவர் விளையாட்டு போட்டியில் மாவட்ட மட்டத்திற்கு மாணவர்கள் தெரிவு.
- வேர்ல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரனையுடன் தரம் 3 இற்கான மாதிரி வகுப்பறை அமைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 4 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றமை (S.சிவானுஜா-170 , S.சருஸ்-157 , R.பிரியதர்சினி-164 , R.யோகன்யா-160 ) 30 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். வகுப்பாசிரியர் - திரு A.ஆறுமுகம், திரு.S.நகுலேஸ்வரன்
- **2016.12.01 மூன்றாவது "முதல் எழுத்து"** சிறுவர் சஞ்சிகை வெளியீடு.
- 2017 ஆம் ஆண்டு தமிழ் மொழித்தின போட்டிகளில் கோட்ட மற்றும் வலய மட்ட போட்டிகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (பேச்சு K.பிறைமி 1ம் இடம், எழுத்தாக்கம் S.ருசாந்தினி, பாவோதல் S.அசானிபெர்சியா)
- சிறுவர் மெய்வல்லுனர் போட்டிகளுக்கு மாவட்ட மட்ட போட்டிகள் வரை தரம் 04 மற்றும் தரம் 05 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
- பாடசாலையை சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது.
- 2017 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 2 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றமை (S.விக்ரம் - 160, J.ரவிநாத் - 173) 23 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றனர். வகுப்பாசிரியர் - திரு.T.புண்ணியமூர்த்தி, திருமதி.A.N.B.லூசியன் மேர்சி
- கோட்டமட்ட சமயப்போட்டி K.பிறைமி 1 ஆம் இடம்.
- வேர்ல்ட் விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர்நேய மாதிரி வகுப்பறைகள் இரண்டு அமைக்கப்பட்டது.
- **2017.12.10 நான்காவது "முதல் எழுத்து"** சிறுவர் சஞ்சிகை வெளியீடு.

தொடரும்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் நன்றி பகிர்வு...

புது பொலிவுடன் முதல் எழுத்து என்ற நூலினை இவ்வாண்டும் வெளியிட எனக்கு பொறுப்பாசிரியர் என்ற சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு மகிழ்ச்சி, எமது பாடசாலையின் நான்காவது நூல் வெளியீட்டில் உங்களை சந்திக்கின்றேன்.

மனித நடத்தைகளை கொண்டே அவனது உளவியலை அறியலாம். அவ்வகையில் சிறுவர்களின் சிந்தனைகளை வெளிப்படுத்துவது அவர்களின் ஆக்கங்களும், சித்திரங்களும் ஆகும். எமது மாணவச் செல்வங்களின் சித்திரங்கள் ஆக்கங்கள் அவர்களின் ஆக்கத்திறனையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன என்பதுடன். அவர்களின் வயது மட்டத்திற்கு சென்று அவர்களின் ஆக்கங்களின் குறைநிறைகளை கண்டு அகமகிழுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறுவர் உலகம் என்பது தனி, அதனை நாம் கடந்து வந்தாலும், மீண்டும் அப்பருவத்திற்குள் நுழைந்தால் தான் உணரலாம். அவ்வகையில் நாங்கள் எங்கள் பிள்ளைகளிடம் கண்ட திறன்களை வைத்து இந்நூலினை உருவாக்க உதவிய நல்லுள்ளங்களுக்கு நன்றி பகிரலாம் என எண்ணுகின்றேன்.

எங்களோடு இணைந்து கைகோர்த்த அனைவரையும் நினைவு கூர்ந்து நன்றிகளை தெரிவித்து கொள்வதுடன். முகப்பட்டை அனுசரணை வழங்கிய திரு.குமார் (ஜெயசந்திரன்ஸ்) அவர்களுக்கும், நூலிற்கான வாழ்த்துரைகள், ஆசியுரைகள் என்பவற்றை வழங்கிய அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். வாழ்த்துரையை வழங்கிய எழுத்தாளர், நண்பர் திரு.சண்முகம் சிவக்குமார் அவர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள். விழாவில் கலந்து சிறப்பித்த அனைத்து அதிதிகளுக்கும் பங்குபற்றிய ஆசிரியர்கள், நண்பர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றிகள். அத்தோடு ஆக்கங்களை மெருகூட்டி நிகழ்வுகளை அரங்கேற்றிய எமது பாடசாலையின் ஆசிரியர்கள், ஆக்கங்களை படைத்த மாணவர்களுக்கும் நன்றிகள்.


விழா சிறப்புற ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோருக்கும், நலன் விரும்பிகளுக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். அச்சு பதிப்பை மேற்கொண்ட நிவ் சைன் கொம்பியூட்டர்ஸ், மற்றும் செல்வி P.தர்சினி ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன். எல்லா விதத்திலும் ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கிய அதிபர் மு.லோகநாதன் அவர்களுக்கும் எமது பாடசாலையின் ஆசிரியர் குழாத்தினருக்கும், மனம் நிறைந்த நன்றிகள். இன்னும் இங்கு பெயர் குறிப்பிடாது விட்ட ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும், அனைவருக்கும் பணிவான வாழ்த்துக்களும் நன்றிகளும்.


திரு.S.சிவக்குமார்
பொறுப்பாசிரியர்,
நு/அக்கரப்பத்தனை ஆரம்ப த.வி, அக்கரப்பத்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







முகப்பட்டை அனுசரணை

**ஜெயசந்திரன்ஸ்**
இல 37, பிரதான வீதி, அக்கரப்பத்தனை.
தொலைபேசி : 0512230099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Shine - 0512230158